வெளியே விற்கப்படுகிற விலை. ஆனால், அந்தத் தொழிலாளர்களுக்கு ரூ. 1.50 , ரூ. 1.60 தான் கிடைக்கிறது. வியாபாரிகள் அந்த விலைக்கு வாங்கி ரூ 2.40க்கு விற்பனை செய்கிறார்கள். முன்னால் மாவட்ட பனைவெல்ல கூட்டுறவுச் சம்மேளனம் இருந்தது. இப்போது அவை கலைக்கப்பட்டுள்ளன. அவைகளை மீண்டும் புதுப்பித்து, பனைமரம் ஏறும் தொழிலாளர்களுக்கு நியாய விலை கிடைக்க அந்த சம்மேளனமே நல்ல விலை கொடுத்து வாங்கி, விற்பனை செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு கே. இராஜா முகமது : துணைத் தலைவரவர்களே, 8 கிலோ பனை வெல்லம் தயாரிப்பதற்கு ரூ. 10.07 செலவாகிறது. அதில் 3 ரூபாய் அந்த பனஞ்சாறை வெல்லமாகக் காய்ச்சுவதற்கு பணியாற்றுகின்ற பெண்ணுக்குக் கொடுக்கப்படுகிறது. விறகுக்கு ரூ. 3.60 இப்படியெல்லாம் கணக்கிட்டுப் பார்த்தால் 8 கிலோ வெல்லம் தயாரிப்பதற்கு ரூ. 10 .07 செலவாகிறது. ஆனால் 8 கிலோ வெல்லத்தை தாயரிப்பதற்கு பனஞ்சாறு இறக்கும் தொழிலாளர்களுக்கு 16 ரூபாய் கொடுக்கப்படுகிறது. ஆக 6 ரூபாய் அந்தத் தொழிலாளர்களுக்கு கூலி கிடைக்கிறது. அவன் வீட்டிலே பணியாற்றக்கூடிய பெண்தான் பனஞ்சாறு காய்ச்சுகிறாள். அதற்கு 3 ரூபாய் கூலி. ஆக 9 ரூபாய் அளவிற்கு அவர்களுக்குக் கிடைக்கிறது. வருஷம் பூராவும் இந்தத் தொழில் இருந்தால் அவர்கள் வளமாக இருப்பார்கள். ஆனால் 150 நாட்களுக்குத்தான் வாய்ப்பு இருக்கிறது. இதற்கு மேல் ஏதாவது உதவி செய்வது என்பது கொஞ்சம் சிரமமானது. அதற்குப் பதிலாக இவ்வாறு உடலுழைப்பை வைத்து, பல மரங்களில் ஏறி இறங்குவது மிகவும் சிரமம் என்று கருதி, புதிதாக ஏதாவது கருவி கண்டுபிடித்து அதிகமாக சிரமம் இல்லாமல் நிறைந்த அளவில் பனஞ்சாறு கொண்டுவர முடியுமா என்பதைப் பற்றி இந்த சம்மேளனம் ஆராயும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது. மாவட்ட அளவிலே இந்த சம்மேளனத்தை புதுப்பிப்பது பற்றி கூறினார்கள். அதுபற்றி போதுமான அளவுக்குக் தகவல் சேகரித்து, விரைவில் செயல் படக்கூடிய சூழ்நிலையை அரசு ஆராயும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தருமபுரி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி.

* வினா எண்·680.—டாக்டர் கே. சமரசம் : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) கடந்த காலங்களில் தருமபுரி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியில் முறைகேடுகள் நடந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் என்ன முறைகேடுகள் நடந்துள்ளன.

(இ) இதன் மீது அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது. ?

1979 ஏப்ரல் 11]

மாண்புமிகு திரு கே ஏ. கிருஷ்ணசாமி :

(அ) ஆம்.

(ஆ) கூட்டுறவுச் சங்கங்களிடமிருந்து கடன்கள் வசூலிக்கப் பட்டதாகவும், மீண்டும் சங்கங்களுக்கு கடன்கள் கொடுக்கப் பட்டதாகவும், பல வழிகளில் தவறான கணக்குகள் சரிக்கட்டி எழுதப்பட்டுள்ளன. வசூலிக்கப்பட்டதாக காட்டப்பட்ட கடன்கள் தலைமை வங்கிக்கு செலுத்தப்படவில்லை. தலைமை வங்கியிலிருந்து புதிய கடன்கள் பெறாமலேயே கூட்டுறவு வங்கி கடன் வழங்கியுள்ளது. இதுவன்றி பொய்க் கடன்கள் (பினாமி) கொடுத்த வகையில் முறைகேடுகள் நடந்துள்ளன. மேலும் பயிர்க்கடன் முறையை மேற்கொள்ளாமல் பணமாகவே கடன்கள் வழங்கப்பட்டுள்ளன. பருவகாலங்கள் கடைபிடிக்கப்படவில்லை.

(இ) அப்போதிருந்த துணைப்பதிவாளர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு அவரது ஓய்வூதியம் குறைக்கப்பட்டுள்ளது. இதில் சம்பந்தப்பட்ட வங்கியின் 49 பணியாளர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, அவர்களில் 27 பேர்கள் வேலையிலிருந்து நீக்கப்பட்டார்கள். நிலுவையிலுள்ள கடன் தொகைகளை வசூலிக்க தீவிர நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

வங்கியின் பணிகளை சீர் செய்யவும், அப்பணிகள் திறம்பட நடைபெறவும் அவ்வப்போது மறு ஆய்வு செய்யவும் புனரமைப்புக் குழு அமைக்கப்பட்டுள்ளது. நிலுவையிலிருந்த வராத அல்லது சந்தேகக் கடன்களை ஈடுகட்ட மத்திய அரசும் மாநில அரசும் தனித்தனியாக ரூ. 12.27 இலட்சம் உதவித்தொகை புனரமைப்புத் திட்டத்தின் கீழ் வழங்கியுள்ளன. இதுவன்றி மாநில அரசு பங்குத் தொகையாக ரூ. 25 இலட்சமும், நீண்டகாலக் கடனாக மேலும் ரூ. 25 இலட்சமும் வழங்கியுள்ளது.

டாக்டர் கே. சமரசம் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்த முறைகேடுகள் நடக்கின்றபோது அந்த தருமபுரி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் தலைவராக இருந்தவர் பெயர் என்ன ? அவர் தனது பதவியை முறைகேடாக நடத்திச் சென்றிருக்கிறார் என்று குற்றச்சாட்டு சொல்லப்படுகிறதே அது உண்மையா ? அப்படியானால் அவர் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பது பற்றி அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : பேரவைத் துணைத் தலைவரவர்களே, அந்த விவரம் என்னிடத்தில் இப்போது இல்லை ஆகவே அருள் கூர்ந்து தனிக் கேள்வி போடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

டாக்டர் கே. சமரசம் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, இப்படி முறைகேடுகள் நடைபெற்றபின் இப்போது சீர்திருத்திக் கொண்டு வரப்பட்டிருக்கக் கூடிய இந்த மாவட்ட

]1979 ஏப்ரல் 11

மத்திய கூட்டுறவு வங்கி, மக்களுக்கு மேலும் நல்ல முறையில் உதவக் கூடிய வகையில் மேலும் சீர்திருத்தங்களைச் செய்ய அரசு முன்வருமா? அதற்குப் புதிய ஆலோசகர்களையும், தலைவர்களையும் நியமிக்க அரசு தேவையான செயல் திட்டம் வகுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி : பேரவைத் துணைத் தலைவரவர்களே, அந்த வங்கியை சீரமைக்க இன்றைக்கு எல்லா நடவடிக்கைகளையும் தமிழக அரசு மேற்கொண்டிருக்கிறது.

திரு. க. மருதாசலம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்த தருமபுரி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியிலே முறைகேடு ஏற்பட்டிருப்பதைப் போல மற்ற மாவட்ட கூட்டுறவு வங்கிகளிலும் ஏதாவது முறைகேடுகள் நடைபெற்றதாக அமைச்சரவர்களுக்கு ஏதேனும் புகார்கள் வந்துள்ளனவா, அப்படியானால் அவற்றின் மீது எடுக்கப்பட்டு வருகின்ற நடவடிக்கை என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, பொதுவாக கூட்டுறவு நிலவள வங்கிகளின் மீது, முறைகேடுகள் நடப்பதாக பல மனுக்கள் வந்திருக்கின்றன. பல முறைகேடுகள் பற்றிய விவரங்கள் வந்திருக்கின்றன. உரிய வகையில் இந்த அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. நா. சுந்தரராஜ் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இன்றைய தினம் இந்த அரசு ஏற்பட்டு இரண்டாண்டுகள் ஆகின்றன. பாரதி கமிஷனின் அறிக்கையை ஏற்று எத்தனை பேர் மீது வழக்கு தொடரப்பட்டிருக்கின்றது என்பது தெரியவில்லை. ஆகவே வழக்கு தொடரப்படவேண்டிய எல்லோரும் இன்னும் கூட்டுறவுத் துறையிலே ஈடுபட்டுக்கொண்டு நிம்மதியாகக் காலத்தைக் கழித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை அரசு அறியுமா? அவர்கள் மீது விரைவாக அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, பாரதி குழுவினுடைய அறிக்கைகள் மீது தொடர்ந்து நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டு வருகிறோம். ஆகவே அருள் கூர்ந்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனிக் கேள்வி போட்டால் அந்தக் குழுவினுடைய அறிக்கைகள் படி எத்தனை வழக்குகள் போடப்பட்டது என்ற விவரங்களை அளிக்க அரசு தயாராக இருக்கிறது.

1979 ஏப்ரல் 11[

திரு. வி. கே. கோதண்டராமன் : தலைவரவர்களே, இந்த முறைகேடுகள் எந்த ஆண்டு முதல் நடைபெற்றன ? எந்த அளவுக்கு இதில் ஊழல் ஏற்பட்டுள்ளது ? அதில் ஈடுபட்டவர்கள் பெரிய அதிகாரிகளாக இருந்தால் ஓய்வூதியத்தைக் குறைத்து விடுவதும், மற்ற அலுவலர்களாக இருந்தால் அவர்களை வீட்டுக்கு அனுப்புவதும் போன்ற நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றனவே, இது முறைதானா ? ஆகவே யாராக இருந்தாலும் அவர்கள் மீது கிரிமினல் வழக்கு போட்டு அவர்களுக்கு கடின காவல் தண்டனை விதித்து அவர்களை உள்ளே அனுப்பக் கூடிய அளவில் விதி இல்லையா ? அப்படி இல்லை என்றால் அது போன்ற விதிகள் ஏற்படுத்தப்படுமா ? ஆகவே இது மாதிரி குற்றங்களுக்கு கிரிமினல் வழக்கு தொடரப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : பேரவைத் துணைத் தலைவரவர்களே, தருமபுரி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் கணக்குகளில் 1969 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் கடன் கொடுக்கப்பட்டதாக 24 இலட்சத்து 53 ஆயிரம் ரூபாயும், கடன் வசூலிக்கப்பட்டதாக 33 இலட்சத்து 82 ஆயிரம் ரூபாயும், அதே ஆண்டு மார்ச் மாதத்தில் கடன் கொடுக்கப்பட்டதாக 36 இலட்சத்து 73 ஆயிரம் ரூபாயும் கடன் வசூலிக்கப்பட்டதாக 28 இலட்சத்து 59 ஆயிரம் ரூபாயும் என்ற அளவில் அவர்கள் சரிக்கட்டி புரட்டுக் கணக்குகளைக் காட்டி இருக்கிறார்கள் என்பது முறைகேடு. அப்படி புரட்டுக் கணக்குகளைக் காட்டுவதற்கு துணையாக இருந்த 13—2—1968 முதல் 31—5—1969 முடிய வங்கியின் செயலாளராகப் பணியாற்றிய திரு. சவரிமுத்து என்பவர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அவர் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டார். பின்னர், அவருடைய, ஓய்வூதியத்தில் இருந்து மாதம் ரூ. 20, நிரந்தரமாக பிடித்தம் செய்து தண்டனை விதிக்கப்பட்டது. வங்கியில் நடந்த முறைகேடுகளுக்குக் காரணமானவர்களாகக் கண்டுபிடிக்கப்பட்ட 49 பணியாளர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, அதில் 27 பணியாளர்கள் வங்கியின் பணியில் இருந்து வேலை நீக்கம் செய்யப்பட்டார்கள்.

[முற்பகல் 9-20].

திரு. சேலம் மு. ஆறுமுகம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் ஆண்டுதோறும் கூட்டுறவு வாரம் கொண்டாடுகிற நேரத்தில் மகளிர் தினம் என்றும், நலிவுற்றோர் தினம் என்றும், பசுமை புரட்சி தினம் என்றும் கொண்டாடுகிறோம். ஆகவே, கூட்டுறவு ஊழல்கள் ஒழிப்பு தினம் என்று ஒரு ஒதுக்கி அதைக் கொண்டாட அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய யோசனைப்படி அது கொண்டாடத் தேவையில்லை. என்று அரசு கருதுகிறது. ஆனால் உரியபடி, சட்டப்படி ஊழல்களை ஒழிப்பதற்கு என்னென்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமோ, அந்த நடவடிக்கைகளை சட்டப்படி உறுதியாக இந்த அரசு எடுக்கும்.

திரு. இரா. முத்தையா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்ட மத்திய வங்கியில் நடந்த நடை முறைகளுக்கும், மோசடிகளுக்கும் பொறுப்பாக இருந்த துணைப் பதிவாளர் அவர்களும், இன்னும் சில வங்கி ஊழியர்களும், ஆகியவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுத்ததாக அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். ஆனால் அத்தகைய மோசடிகளுக்கு எல்லாம் காரணமாக இருந்தவர்கள் அந்தக் காலக் கட்டங்களில் அந்த வங்கியினுடைய தலைவர்களாக இருந்தவர்கள் தான். அவர்கள் குறுநில மன்னர்களாக திகழ்ந்து வந்தார்கள். அப்படிப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்கின்ற முறையில், அவர்களைக் கைது செய்து அவர்கள் மீது வழக்குத் தொடர அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய ஆலோசனைகள் ஆலோசிக்கப்படும்.

திரு. எம். அண்ணாமலை : தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்ட மத்திய வங்கியில் முறைகேடுகள் நடந்ததால் அப்பாவி விவசாயிகள் மீது கடன் வாங்கியதாக பொய் ரிக்கார்டு செய்துள்ளதால் அவர்கள் புதிய கடன் கேட்கின்ற நேரத்தில், பழைய கடனைத் தரவேண்டும் என்று நிர்ப்பந்தப்படுதுவதும், கடன் பெறமுடியாத நிலை அரசுக்குத் தெரியுமா ? அரசு தகுந்த நடவடிக்கை எடுக்க முன்வருமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, அந்த நலிவுற்ற மத்திய வங்கியை புனர் அமைப்பதற்காக பல நடவடிக்கைகளை மாநில அரசும், மத்திய அரசும் சில நடவடிக்கைகளை எடுத்து வருகின்றன. அந்த வகையில் நியாயமாக விவசாயிகளுக்கு உரிய வசதிகளை செய்ய நிச்சயமாக இந்த அரசு முயற்சிக்கும்.

திருவண்ணாமலை, செங்கம் வட்ட விவசாயிகளுக்கு கூட்டுறவுக் கடன்கள்.

* வினா எண் 681—திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா ?

திருவண்ணாமலை செங்கம் இரண்டு வட்டங்களிலும் கூட்டுறவு சங்கங்களின் மூலம் விவசாயிகள் உழவு கடன் பெற இயலாமல் உள்ளது அரசுக்குத் தெரியுமா ?